සමුපකාර සේවා, අලෙවි සංවර්ධන සහ පාරිභෝගික ආරක්ෂණ රාජ්‍ය අමාත්‍යාංශය
கூட்டுறவுச் சேவைகள், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு
State Ministry of Co-operative Services, Marketing Development and Consumer Protection

8 වන මහල, එච් කිසු කළම්බු ගොඩනැගිල්ල, අංක: 464 ඒ, ටී බී ජයා මාවත, කොළඹ 10.
8 ஆவது மாடி, எச்கியூ கொழும்பு கட்டடம், இல: 464 ஏ, ரி.பி. ஜெயா மாவத்தை, கொழும்பு 10
8th Floor, HQ Colombo Building, No: 464 A, T B Jayah Mawatha, Colombo 10.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல.<br>My No. | SMCMC/DEV/04/05 | ඔබේ අංකය<br>உமது இல.<br>Your No. | | දිනය<br>திகதி<br>Date | 2022.02.18 |

சுற்றுநிருபம் -வரைபு

**சகல மாவட்ட செயலாளர்களுக்கும்,**

**இலங்கையிலுள்ளள அனைத்து கிராம சேவையாளர் பிரிவுகளிலும் பெண் தொழில் முயற்சியாளர்களால் நடாத்துவதற்கான சிறிய நவீன பல்பொருள் விற்பனை நிலைய (Home Shop) வலையமைப்பினை உருவாக்குதல்.**

மேற்குறித்த விடயம் தொடர்பாக முன்மொழியப்பட்ட உத்தேச வீட்டுடன் இணைந்த கடைத் திட்டத்தை (Home Shop) அமுல்படுத்துவது தொடர்பாக பொருளாதார மற்றும் வறுமையொழிப்புத் தொடர்பான ஜனாதிபதி செயலணியின் பிரதம செயற்பாட்டு அதிகாரியினால் 2021.12.16 ஆம் திகதியிடப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள PTF/04/Meeting/39/2021 இலக்க கடிதம் மற்றும் 2022.01.12 ஆம் திகதியிடப்பட்டு தங்களிற்கு அனுப்பிவைக்கப்பட்ட எனது SMCMC / DEV / 04/05 இலக்க கடிதம் தொடர்பானது.

2. இந்நாட்டின் சகல கிராம சேவையாளர் பிரிவுகளிலும் பெண் தொழில் முயற்சியாளர்களால் வீட்டுடனிணைந்த கடைகளாக சிறிய நவீன பல்பொருள் விற்பனை நிலைய வலையமைப்பினை உருவாக்குவதற்காக 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் 15,000 மில்லியன் ரூபா கூட்டுறவுச் சேவைகள், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. சமுர்த்தி கொடுப்பனவு வழங்கப்படாத குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைத் தெரிவு செய்து ஒரு குடும்பத்திற்கு ரூபா 2000.00 பெறுதியிலான ஒரு நிவாரணப் பொதியினை வழங்குவதற்காக வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக 15,000 மில்லியன் ரூபா வர்த்தக அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அவர்களுக்குத் தேவையான அத்தியாவசிய பொருட்களை இந்த விற்பனை நிலையத்தின் ஊடாக சாதாரண விலையில் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பத்தினை ஏற்படுத்துதல் இதன் பிரதான நோக்கமாகும்.

3. ஊட்டச்சத்து: கொரோணா தொற்றுநோய்க் காலப் பகுதியில் கிராமப்புற மக்களின் ஊட்டச்சத்து தேவைகளை நிறைவேற்றுவது மற்றும் கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துவ ஒரு கடினமான பணியாக இருந்தது. இந்த நிகழ்ச்சித் திட்டம் புதிதாகப் பிறந்த குழந்தைகள் உள்ளடங்கலாக முழுமையான குடும்பத்தின் ஊட்டச் சத்து தேவைப் பாடுகளுக்கான சில நிவாரணங்கள் இதனூடாக வழங்குவதல் எதிர்பார்க்கப் படுகின்றது. அதன்பிரகாரம், கர்ப்பிணித் தாய்மார்களுக்கான ஊட்டச் சத்துப் பொதிகளை வழங்கவும் மற்றும் அதற்காக இலத்திரனியல் அட்டையொன்றும் விநியோகிப்பதற்கும் ஏற்பாடுகளும் இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உள்ளடக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

4. கிராமிய உற்பத்திகள் - இந்த விற்பனை நிலையங்களில் நுகர்வுப் பொருட்கள் மற்றும் கிராமப்புற மக்களின் உணவுத் தேவைகளை வழங்கக் கூடிய அக்கிராமத்தின் உற்பத்திப் பொருட்கள் விற்கப்படல் வேண்டும் மற்றும் இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் அத்தியாவசிய நுகர்வுப் பொருட்கள் பிரதான விநியோக வலையமைப்புடன் ஒருங்கிணைக்கப்பட்டு, ஏதாவது அனர்த்தங்கள் ஏற்பட்டால் தடங்கலற்ற வழங்கல் மற்றும் விநியோகத்தை உறுதிப்படுத்துதல். மற்றும் கிராமப்புற குறைந்த வருமானம் ஈட்டும் பெண் முயற்சியாளர்கள் மற்றும் கிராமப்புற உற்பத்திப் பொருட்களுக்கான ஒரு சந்தையை கிராமப் புறங்களில் உருவாக்குதல் ஆகியவற்றை இது ஊக்குவிக்கும். கிராம மக்கள் ஒரு ஒழுங்குமுறைப் படுத்தப்பட்டதொரு செலவு செய்தல் மற்றும் நுகர்வு செய்தல் முறைக்கு முறைமைப்படுத்த உதவதுடன் கிராமப்புற மக்களின் வருமானத்தை அதிகரித்து வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் பங்களிப்புச் செய்யும்.

5. இணைய வலையமைப்பு - இக்கடைகள் அனைத்தும் தகவல் தொழில் நுட்பத்தினூடாக வலையமைப்பில் இணைக்கப்படும். அதற்காக தேசிய தகவல் தொழில் நுட்ப அமைப்பு ஒன்று உருவாக்கப்படும் மற்றும் அந்தத் தகவல்களின் அடிப்படையில் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும்.



දුරකථන අංකය / தொலைபேசி இல. / Telephone No. +94 11 268 4145 | ෆැක්ස් / தொலைநகல் / Fax +94 11 268 4133 | විද්‍යුත් තැපැල / மின்னஞ்சல் / E-Mail info@coopmin.gov.lk | ලේකම් / செயலாளர் / Secretary +94 11 268 4145

6. பெண் தொழில் முயற்சியாளர்களைத் தெரிவு செய்தல்- செயலணியின் (Task Force) அறிவுறுத்தல்களின்படி பிரதேச மட்ட அபிவிருத்திக் குழுவின் வழிகாட்டல்களின் கீழ் பிரதேச செயலாளர்களினால் ஏற்கனவே முயற்சியாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

7. கடைக்கான கட்டிட வசதிகள்- இந்த நோக்கத்திற்காக சில பெண் தொழில் முயற்சியாளர்கள் அவர்களது வீட்டின் ஒரு பகுதி இடத்தினை ஏற்கனவே ஒதுக்கியுள்ளார்கள். இதற்கான குறைந்தபட்ச இடப் பரப்பு 200 சதுர அடிகளாகும், மற்றும் ஒரு சிறிய நவீன பல்பொருள் விற்பனை நிலையத்திற்கான பொருளாதார ரீதியில் சாத்தியமான மிகவும் பொருத்தமான இடப் பரப்பு 400 சதுர அடிகளாக இனங்காணப்பட்டுள்ளது. தற்போதுள்ள வீட்டைத் திருத்தி அமைப்பதன் மூலமோ அல்லது வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் புதிதாக ஒன்றை நிர்மாணித்தல் அல்லது தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் புதிதாக ஒன்றை நிர்மாணித்தல் மூலம் இதனை செய்யமுடியும்.

8. வீட்டை புனரமைப்புச் செய்தல்- தற்போதுள்ள வீட்டை பிரதேச செயலாளரோ அல்லது பிரதேச செயலக அதிகாரிகளின் உதவியுடன் பெண் தொழில் முயற்சியாளரின் விருப்பத்தின் பிரகாரம் புனரமைப்புச் செய்யமுடியும். எனவே பிரதேச செயலாளரின் உத்தியோகத்தர் பெண் தொழில் முயற்சியாளரைச் சந்தித்து சிறியரக நவீன பல்பொருள் விற்பனை நிலையத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தின் அளவை உறுதிப்படுத்த வேண்டும். உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கு பரப்பளவு சதுர அடிகளில் தேவைப்படுகின்றது. இவ் விபரங்களை (சம்பந்தப்பட்ட படிவங்கள் இணைக்கப்பட்டுள்ளது) 2022.03.04 ஆம் திகதிக்கு முன்னர் home.shops22@gmail.com என்ற மின் அஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். வீட்டை சிறியரக நவீன பல் பொருள் விற்பனை நிலையமாக அமைப்பதற்காக அதிகபட்சம் 03 இலட்சம் ரூபா வழங்கப்படும். பிரதேச செயலாளரினால் புனரமைப்பு மேற்கொள்ளப்படுமாயின் அதற்கான மதிப்பீடுகளை தாமதமின்றி உடனடியாக தயாரித்து அரச கொள்வனவு வழிகாட்டல்களின் பிரகாரம் புனரமைப்பு திருத்தப்பணிகள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். ரூபா 300,000.00 ற்கு மேல் செலவானால் 300,000.00 ரூபாக்கு மேல் அதிகரித்த தொகையினை பெண் தொழில் முயற்சியாளர் ஏற்க வேண்டும். மற்றும் புனரமைப்பு திருத்தப்பணிகள் ரூபா 300,000.00 செலவாகவில்லை என்றால், உண்மையான செலவைச் செலுத்தலாம் அல்லது மீளளிப்புச் செய்யலாம். பிரதேச செயலகம் / மாவட்ட செயலகத்தின் நிருவாகச் செலவுளை மேற்கொள்வதற்காக சிறியரக நவீன பல் பொருள் விற்பனை நிலையம் ஒன்றிற்காக 5,000/= ரூபா நிதியும், மாவட்ட செயலகங்களிற்காக 1,000/= ரூபா நிதியும் வழங்கப்புடும். கட்டிடத்தினைப் புனரமைப்புச் செய்வதற்கான நிதி ஒதுக்கீட்டில் இருந்து ஒரு பகுதி நிதி பிரதேச செயலகங்களிற்கு விடுவிப்புச் செய்யப்படும்.

9. சிறிய நவீன பல்பொருள் விற்பனை நிலையங்கள் கணினி மென்பொருள் வலையமைப்பினூடாக இணைக்கப்படல் - விற்பனைக்கான சகல உற்பத்திகளும் கணினி மென்பொருளினுள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் அனைத்து சிறிய நவீன பல்பொருள் விற்பனை நிலையங்களும் கணினி மென்பொருளினூடாக ஒரு வலையமைப்பாக இணைக்கப்படும் இதற்காக ரூபா 10,000.00 - 10,500.00 மாதாந்த செலவு ஏற்படும் அதனுள், பயிற்சி மற்றும் கணினி மென்பொருளிற்கு மேலதிகமாக இது கணினி, விலைச் சிட்டை பிரதியிடல் (bill printer), காசு லாச்சி (drawer), தராசுகள் (scales) பார் கோட் ஸ்கானர் (bar code scanner), நுகர்வோருகான திரை (consumer screen), தடங்கலற்ற மின் விநியோகி (UPS) ஆகிய வன்பொருட்களையும் உள்ளடக்கியிருக்கும். இந்தச் செலவுக்கான கொடுப்பனவு தொழில் முயற்சியாளர்களின் லாபத்திலிருந்து மேற்கொள்ளப்படும். இணைப்புச் செலவு மற்றும் தரவுத் தளத்திற்கான கொடுப்பனவு இத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படும். இது தொடர்பாக உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திட பெண் தொழில் முயற்சியாளர்கள் உடன்படல் வேண்டும்.

10. பெண் தொழில் முயற்சியாளர்களுக்கான பயிற்சியளித்தல்- தெரிவு செய்யப்பட்ட பெண் தொழில் முயற்சியாளர்களுக்கான கணினி மென்பொருள் செயற்படுத்தும் பயிற்சியானது கணினி மென்பொருள் வழங்குநரினால் வழங்கப்படும் மற்றும் கைத்தொழில் அமைச்சு, மகளீர் விவகாரங்கள் அமைச்சு, இளைஞர் விவகாரங்கள் அமைச்சு ஆகியவற்றினால் பெண் தொழில் முனைவோர் மற்றும் நுகர்வோர் சேவைகள் தொடர்பான பயிற்சி வழங்கப்படும்.

11. தெரிவு செய்யப்பட்டுள்ள விற்பனை நிலையங்களுக்கான ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் - நவீன பல் பொருள் விற்பனை நிலையத்திற்காகக் குறித்து ஒதுக்கப்பட்டுள்ள இடப் பரப்பினை அடிப்படையாகக் கொண்டு தெரிவு செய்யப்பட்டுள்ள பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு பின்வரும் பொருட்களும் மற்றும் உபகரணங்களும் நன்கொடையாக வழங்கப்படும். வீட்டுக்கான புனரமைப்புப் பணிகள் நிறைவடையும் திகதியை 2022.03.04 ஆம் திகதிக்கு முன்னர் home.shops22@gmail.com என்ற மின் அஞ்சலுக்கு அனுப்புதல் வேண்டும்.

| பொருள் விபரம் | சதுர அடிப் பரப்பளவுப் பிரமாணம் | | |
|---|---|---|---|
| | 300 க்கு குறைவு | 300-400 க்கு இடையில் | 400 க்கு மேல் |
| ஒற்றைப் பக்க ராக்கை 60'' x 36''x 18'' | 04 | 06 | 08 |
| 60'' x 36''x 36'' இருபக்க ராக்கை | 02 | 03 | 04 |
| காசாளர் மேசை | 01 | 01 | 01 |
| கதிரை | 01 | 01 | 01 |
| நிறுவை மேசை | 01 | 01 | 01 |
| உறை நிலை குளிர்சாதனப் பெட்டி (Freezer) | 180 லீற்ரர் | 240 லீற்ரர் | 260 லீற்ரர |
| குளிர்சாதனப் பெட்டி | 180 லீற்ரர் | 200 லீற்ரர் | 303 லீற்ரர் |
| போத்தல் குளிர் சாதனப பெட்டி (Bottle Cooler) | - | 232 லீற்ரர் | 240 லீற்ரர் |
| பொருட்களை வைத்து தள்ளும் வண்டில் (60 L) - (Trolley) | 02 | 02 | 02 |
| பிளாஸ்ரிக் கூடைகள் | 02 | 03 | 04 |
| கதவு அழைப்பு மணி (Doorbell) | 01 | 01 | 01 |
| பொலித்தீன் பொதி செய்யும் மெசின் | 01 | 01 | 01 |
| விலைப் பட்டியல் பலகை | 01 | 01 | 01 |
| சீருடை மேலங்கி (Overcoat) | 02 | 02 | 02 |

ஊபகரணங்களிற்கு 06 மாதகால உத்தரவாத வங்கப்பட்டு வருவதுடன், உத்தரவாத காலப் பகுதி நிறைவடைந்த பின்னர் உபகரணங்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் பெண் தொழில் முயற்சியாளர்களினால் ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும். அனைத்து உபகரணங்களும் மிகவும் கவனமாகப் பாவிக்கப்படல் வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

12. நுகர்வுப் பொருட்களின் விநியோகம்- மத்திய கொள்வனவுகள், பலநோக்கு கூட்டுறவுகளினூடான கொள்வனவு, மற்றும் பெண் தொழில் முயற்சியாளர்களினால் மேற்கொள்ளப்படும் கொள்வனவு ஆகிய மூன்று வழிகளில் நுகர்வுப் பொருட்களின் கொள்வனவு மேற்கொள்ளப்படும். மத்திய கொள்வனவுகள் மூலம் பொருட்களை கொள்வனவு செய்யும் போது, தெரிவு செய்யப்பட்ட உற்பத்தியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்கள் பல்வேறு சேவைகள் பெற்றுக்கொள்ளப்படுவதுடன் கூட்டுறவுச் சங்கங்களின் ஊடாக பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு வழங்கப்படும். கூட்டுறவு விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் முன் அனுமதியளிப்புடன் நிர்ணயித்து ஏற்றுக்கொள்ளப்பட்டதொரு விலையில் பலநோக்கு கூட்டுறவு சங்கங்களால் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்படும். கூட்டுறவு விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சினால் சகல நுகர்வுப் பொருட்களுக்கும் காலத்துக்கு காலம் கொள்வனவு விலை, போக்குவரத்துச் செலவுகள், ஏனைய செலவுகள் உள்ளடக்கியதாக அதிகபட்ச சில்லறை விலை நிர்ணயிக்கப்படும். இந்த நோக்கத்திற்காக கூட்டுறவு விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரின் தலைமைத்துவத்தின் கீழ் கூட்டுறவுத் திணைக்கள ஆணையாளர் மற்றும் தேசிய கூட்டுறவுச் சம்மேளனத் தலைவர் ஆகியோரின் பங்கேற்புடன் ஒரு விலையிடல் குழு தாபிக்கப்படும். பெண் தொழில் முயற்சியாளர்கள் தங்களது பிரதேசத்திலே உற்பத்தி செய்யப்படும் எந்தப் பொருளையும் கொள்வனவு செய்து அதனை தமது சிறிய நவீன பல்பொருள் விற்பனை நிலையத்தில் விற்பனை செய்யமுடியும். ஆயினும், சகல தகவல்களும் பெண் தொழில் முயற்சியாளர்களினால் கணினி மென்பொருள் ஊடாகப் பதிவேற்றம் செய்யப்படல் வேண்டும்.

13. பிணைமுறி உத்தரவாதம் - ரூபா 01- 05 இலட்சம் வரையிலான சலுகையடிப்படையிலான வட்டியுடனான கடன் (இடப் பரப்பின் அளவு/ இலத்திரனியல் பரிவர்த்தனை/ பணத்தொகைப் பரிமாற்றம் / உத்தரவாதத் திறமை முதலியன.) குறித்த பிரதேசத்திலுள்ள கூட்டுறவு வங்கிகளிலிருந்து அல்லது சமுர்த்தி வங்கியிலிருந்து ஒரு சலுகை அடிப்படை வட்டியிலான கடன் வழங்கப்படும். அத்துடன் அத்தொகை அதே வங்கியில் நிலையான வைப்பாக வைப்புச் செய்யப்படும். வைக்கப்படும் உத்தரவாதத்தின் மதிப்பு அப்பெண் தொழில் முயற்சியாளருக்கு தெரிவிக்கப்படும். நிலையான வைப்பாக வைப்புச் செய்யப்படும் தொகையை அடிப்படையாகக் கொண்டு ரூபா 01- 05 இலட்சம் வரையில் அத்தியாவசிய நுகர்வுப் பொருட்கள் வழங்கப்படும். பணம் மூலம் மேற்கொள்ளப்படும் விற்பனைகள் ஒவ்வொரு கிழமைகளிலும் இரண்டு தடவை வங்கியில் வைப்பிடல் வேண்டும்.

14. நிவாரணப் பொதி பயனாளிகளுக்கான கொள்வனவு – வர்த்தக அமைச்சினால் மாதாந்தம் ரூபா 2000.00 பெறுமதியான பயனாளிகளுக்கான நிவாரணப் பொதிக் கொடுப்பனவு தொடர்பான விபரங்கள் தரவுத் தளத்தில் உள்ளடக்கப்பட்டும். சகல பரிமாற்றல் நடவடிக்கைகளையும் இலத்திரனியல் முறையூடாக மேற்கொள்ளப்படுவதனால் அவர்களுக்கு ஒரு இலத்திரனியல் அட்டை வழங்கப்படும். பயனாளிகளுக்கான மாதாந்த கொடுப்பனவு இலத்திரனியல் ஊடாக அவர்களது வங்கிக் கணக்கில் வர்த்தக அமைச்சினால் வைப்பிலிடப்படும். பிரதேச செயலகப் பிரிவில் உள்ள சிறிய நவீன பல் பொருள் விற்பனை நிலையங்களில் எத்தனை சந்தர்ப்பங்களிலும் மாதத்தின் எந்த நாளிலும் தெரிவு செய்யப்பட்ட பொருட்களை மட்டுமே கொள்வனவு செய்யமுடியும். அத்துடன் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ஊட்டச் சத்துப் பொதிகளும் மற்றும் அதற்கான இலத்திரனியல் அட்டை விநியோகிப்பதற்கான ஏற்பாடுகளும் இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

15. சிறியரக நவீன பல்பொருள் விற்பனை நிலைய தனித்துவ அடையாளத்தினை உருவாக்குதல்- ஒரே வகையான வெளித் தோற்றத்துடனான, ஒரே மாதிரியான பெயர்ப் பலகையுடன் கூடிய நவீன சிறியரக பல்பொருள் விற்பனை நிலையங்களை உருவாக்குதல். ஒரே சீரான வகையான கடையின் உட்புற வளாகத் தோற்றப்பாட்டுடன் உருவாக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றது. இராஜாங்க அமைச்சினால் பெயர்ப் பலகைக்கான கொள்முதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, கட்டிடப் புனரமைப்பின் போது முகப்பு சீர்செய்யப்படுமென எதிர் பார்க்கப்படுகின்றது. பெண்களுக்கான ஒரு சீருடை மேலங்கி (Overcoat) வழங்குவதற்கான சாத்தியக் கூறுகள் தொடர்பாக ஆராயப்பட்டு வருகின்றது.

16. காப்புறுதி – நவீன சிறியரக பல்பொருள் விற்பனை நிலைய வளாகங்கள், சிறிய பல்பொருள் விற்பனை நிலைய உபகரணங்கள், கணினி அமைப்பு, நுகர்வுப் பொருட்கள், வாடிக்கையாளர்கள், பெண் தொழில் முயற்சியாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் (வேறு ஏதும் இருப்பின்) அனைத்தும் காப்புறுதி செய்யப்படும். இக் காப்புறுதியானது நெருப்பு/தீ, இயற்கை அனர்த்தங்கள், விபத்துக்கள், கைகலப்புக்கள், களவு/ கொள்ளை ஆகியன உள்ளடக்கியுள்ளதுடன் முதல் இரண்டு வருடங்களிற்கான காப்புறுதிக்கான கொடுப்பனவுத் தொகையினை நவீன சிறியரக பல்பொருள் விற்பனை நிலையத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியிலிருந்து அமைச்சினால் மேற்கொள்ளப்படும்.

17. பெண் தொழில் முயற்சியாளர்களின் பங்களிப்பு- பிணைஉறுதி உத்தரவாதம், வீட்டு வளாகத்தை வழங்குதல், மிசாரம் வழங்குதல், நீர் மற்றும் சுகாதாரம், இயலுமான வரையில் கிராமிய உற்பத்திகளை கொள்வனவு செய்தல், விற்பனை செய்தல், மற்றும் உள்ளூர் கொள்வனவு தொடர்பான அனைத்து பற்றுசீட்டுக்களையும் (receipts) கணினிமயப்படுத்துதல், கணினி மென்பொருள் மற்றும் உபகரணங்களை முறையாகப் பராமரித்தல், வீட்டு வளாகம், தரை, மற்றும் சுற்றுப்புறங்களை சுத்தமாக வைத்திருத்தல், கணினி மென்பொருள் மற்றும் அதனுடன் தொடர்பான உபகரணங்களிற்காக பெண் தொழில் முயற்சியாளர்களினால் தமது லாபத்தில் இருந்து மாதாந்தம் 10,000.00 - 10,500.00 ரூபாவிற்குள் வழங்கவும் மற்றும் லாபமீட்டுதல், செயல்திறன், வாடிக்கையாளர் பராமரிப்பு மற்றும் நட்புறவு உள்ளிட்ட நற்குணங்களை கொண்டிருத்தல் எதிர்பார்க்கப்படுகின்றது. பெண் தொழில் முயற்சியாளர்களினால் தனது சிறியரக நவீன பல் பொருள் விற்பனை நிலையத்தை பாதுகாப்பாக வைத்திருக்க அதிகபட்ச பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

18. நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து விலகுதல் - பெண் தொழில் முயற்சியாளர் முதல் இரண்டு வருடங்கள் இந்த நிகழ்ச்சித் திட்டத்தை விட்டு வெளியேற முடியாது என்றும், சிறியரக நவீன பல் பொருள் விற்பனை நிலையத்தை தொடர்ந்து நடத்தமுடியாமல் இருந்தால் (உதாரணமாக: மரணம், வைத்தியசாலையில் அனுமதித்தல், அல்லது ஏனைய ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்கள்) அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உபகரணங்கள் மற்றும் கணினி மற்றும் அதனுடன் இணைந்த உபகரணங்கள் பிரதேச செயலாளரின் சிபாரிசின் அடிப்படையில் நுகர்வுப் பொருட்கள் மற்றும்

ஏனைய பொருட்கள் ஆகியன தெரிவு செய்யப்படும் வேறொரு பெண் தொழில் முயற்சியாளரிடம் கையளிக்கப்படல் வேண்டும்.

ஏதேனும் குறைபாடுகள் இருந்தால், பாதிப்பு (damage) அத்தகைய இழப்பு பிணை உத்தரவாதத்திலிருந்து மீளப்பெற்றுக் கொள்ளப்படும். எந்தவொரு பெண் தொழில் முயற்சியாளரும், இரண்டு வருடங்கள் முடிந்த பின்னர் மூன்று மாத கால அவகாசத்திற்குட்பட்டு, திட்டத்திலிருந்து தானாக முன்வந்து விலகலாம். ஒரு பெண் தொழில் முனைவோர் செயற்பாட்டு ரீதியில் இந்நிகழ்ச்சித் திட்டத்திற்கு ஆதரவு வழங்கவில்லையென்றால் அல்லது செயற்பாடற்ற சிறியரக நவீன பல் பொருள் விற்பனை நிலையமாக இருந்தால் அவர் உடனடியாக நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து நீக்கப்படுவார். மேலும் சிறியரக நவீன பல் பொருள் விற்பனை நிலையத்திற்காக ஏற்பட்ட அனைத்துச் செலவுகளையும் அரசாங்கம் மீட்டெடுக்கும் மற்றும் நிகழ்சித்திட்டத்திற்கு ஏற்பட்ட அசாதாரண நிலைக்கான நட்டம் அறவிடப்படும்.

19. திருத்தங்கள் மேற்கொள்ளுதல் - ரூபா 2,000.00 நிவாரணப் பொதிப் பயனாளிகள் தொடர்பில் பல்வேறு காரணங்களால் திருத்தங்களை மேற்கொள்ளுதல் வர்த்தகத்துக்குப் அமைச்சினாலும் கூட்டுறவுத் துறைக்குப் பொறுப்பான அமைச்சினால் நவீன சிறிய பல்பொருள் விற்பனை நிலையங்களுக்குப் பொருத்தமான திருத்தங்களும் மேற்கொள்ளப்படும்.

20. மாதிரிப் படிவம்- இத்துடன் இணைக்கப்பட்டுள்ள சம்பந்தப்பட்ட மாதிரிப் படிவத்தினை பிரதேச செயலாளர் ஊடாகப் பூரணப்படுத்தி குறித்த திகதிக்கு முன்னராக (home.shops22@gmail.com) என்னும் மின் அஞ்சல் முகவரிக்கு எமக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். இதில், தற்போது உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சினால் பவிக்கப்படும் "LIFe Location Code" என்னும் குறியீட்டைக் குறிப்பிடவும்.

21. பெண் தொழில் முயற்சியாளர் மற்றும் பிரதேச செயலாளர் இணைந்து கைச்சாத்திடப்படவுள்ள உடன்படிக்கைக்கான மாதிரிப் படிவ வரைவு மிக விரைவில் தங்களிற்கு அனுப்பி வைக்கப்படும்.

ஒப்பம்:
**கே. டி. எஸ். ருவன்சந்திர**
செயலாளர்

**பிரதிகள்:**

1. ஜனாதிபதியின் செயலாளர்
2. பிரதம மந்திரியின் செயலாளர்
3. செயலாளர், நிதி அமைச்சு
4. செயலாளர், வர்த்தக அமைச்சு
5. செயலாளர், உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு
6. செயலாளர். கைத்தொழில்கள், மகளிர் விவகாரங்கள் மற்றும் இளைஞர் விவகாரங்களிற்குப் பொறுப்பான அமைச்சுக்கள்
7. பிரதம செயலாளர்கள்
8. திரு. நிஹால் சோமவீர, வறுமை ஒழிப்புக் குழுவின் பிரதம செயற்பாட்டு அதிகாரி
9. திரு. அன்ரன் பெரேரா, வறுமை ஒழிப்புக் குழு
10. கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்/ பதிவாளர் மற்றும் மாகாண கூட்டுறவு ஆணையாளரகள் / பதிவாளர்கள்
11. சகல பிரதேச செயலாளர்கள்